**மார்ச் – 25**

**"ஆதலால் பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய யேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்." - 2பேது 3 : 17, 18**

தேவனுடைய வாக்குத்தத்தங்களை நாம் கருத்தாய்ப் பார்க்கும் பொழுது, நாம் அறிவில் வளர்ந்து, விசுவாசத்தினால் அவைகளை நமக்கு உபயோகப்படுத்தி, அந்த வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலை நம்முடைய ஜீவியங்களில் கண்டுகொள்ள நாடுகிறோம். ஏனெனில், அறிவின் ஒவ்வொரு விஷயமும், அதே சமயத்தில் நாம் கிருபையில் வளருகிறோம். உண்மையும், நன்மையுமான இருதயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதனுடைய கீழ்ப்படிதலின் அளவின் கனியையும், நீதியின் (கிருபை) அளவின் கனியையும் தந்தாலொழிய, அடுத்தபடியான அறிவுக்கு ஆயத்தமில்லாதவர்களாகி இவ்விதமாக நிறுத்தப்படலாம். அல்லது கூடுமானால் திரும்பிப் போகப் பண்ணப்படுவோம். அறிவின் ஒரு நஷ்டம் ஒரு அளவிடக்கூடிய கிருபையின் நஷ்டத்தைக் குறிக்கிறது போல, கிருபையின் ஒரு நஷ்டமும் ஒரு ஒத்த அறிவின் நஷ்டத்தைக் குறிக்கும். அதாவது, நம்முடைய நன்மையோ அல்லது பாவத்திலோ அல்லது கிருபையோ உலகத்தனத்திலோ அல்லது பாவத்திலோ விருதாவாவதற்கு சமமாக அந்தகாரத்தினுள் போவதையும், கர்த்தருடைய வார்த்தையின் வாக்குத்தத்தங்கள் அதிகதிகமாக இருளாவதையும் குறிக்கும். **- Z ’03, 70 (R 3156).**

முன்னதாகவே எச்சரிக்கை செய்யப்படுதல் முன்னதாகவே ஆயுதங்கள் தரிக்கப்படுவதற்காக. இந்தத் தீங்கு நாளிலே, கர்த்தர் வரப்போகும் தீமைகளைக் குறித்து முன்னதாகவே எச்சரித்திருக்கிறார். நாம் சரியான ஆவியைப் பழக்குவித்தால், அத்தீமைகளுக்கு ஆளாக மாட்டோம். ஆனால் அவ்விதமாக நாம் செய்யாதிருந்தால், அவைகள் அக்கிரமக்காரருடைய வஞ்சகங்களைப் போல நம்மை நிச்சயமாக மாட்ட வைத்து, இவ்விதமாக நமது பலனை (வெகுமதியை) இழப்பதற்குக் கொண்டு செல்லும். நம்முடைய கர்த்தராகிய யேசுவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் ஒவ்வொரு நாளும் வளர்வதே இந்தத் தீமைகளின் முன்னிலையிலே நமக்கிருக்கும் ஒரே பாதுகாப்பு.

**- P ’26, 28.**

**ஒத்து வாக்கியங்கள் :-** நீதி 4:14; மாற் 13:23; 2பேது 1:10-12; 2:18; 1கொரி 15:58; கலா 5:1; எபே 4:14,15; 1தீமோ 4:1,2: 1பேது 2:2; 1யோவா 2:18-21,26. **கோபுர வாசிப்பு : Z ’11, 120 (R 4802)**

**வினாக்கள் :** வரவிருக்கும் தீய நிலைமைகளைப் பற்றிய என்னுடைய அறிவினால் நான் எவ்வாறு பாதிக்கப்பட்டேன்? நான் அறிவிலும் கிருபையிலும் வளர்ச்சியடைந்தேனா? எப்படி? ஏன்? பலன் என்ன?